**செய்தி வெளியீடு எண்:650** **நாள் :24.12.2014**

**<u>செய்தி வெளியீடு</u>**

விலையில்லா வேட்டி சேலைத்திட்டம், பொங்கல் 2015 குறித்தான உற்பத்தி முன்னேற்றம், வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு தேவைப்பட்டியலின்படி வேட்டி, சேலைகள் அனுப்புவது ஆகியவற்றைப்பற்றி இன்று 24.12.2014 மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திருமதி எஸ்.கோகுலஇந்திரா, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தனர். இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திரு.ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டங்கள்) திரு.ப்ரதீப் யாதவ், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஈ.சுந்தரவள்ளி, இ.ஆ.ப., மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல்துறை கூடுதல் இயக்குநர் திரு.கர்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசின் சீரிய திட்டங்களில் ஒன்றான விலையில்லா வேட்டி, சேலை திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, சேலைகள் தமிழகத்தின் அனைத்து தாலுக்காக்களுக்கும் அனுப்பபட்டுவருகின்றது. அந்த வேட்டி, சேலைகளை பொங்கல் 2015க்கு அனைத்து பயனாளிகளுக்கும் விநியோகம் செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**